

22.10.2026 செய்திகள்

புயலுக்கு 'முரசு' எனப் பெயர் சூட்டப்படும்

- இந்தியா சார்பில் பரிந்துரை செய்யப்பட்ட தமிழ்ச் சொல்லான முரசு எனப் பெயர் சூட்ட வாய்ப்புள்ளது.
- இந்திய பெருங்கடலின் வடக்குப் பகுதியில், வங்கக் கடல் மற்றும் அரபிக் கடலில் உருவாகும் புயல்களுக்குப் பெயரிடும் பொறுப்பு இந்திய வானிலை ஆய்வு மையத்துக்கு உள்ளது.
- வங்கதேசம் இந்தியா, ஈரான், மாலத்தீவுகள், மியான்மர், ஓமன், பாகிஸ்தான், கத்தார், சவூதி அரேபியா, இலங்கை, தாய்லாந்து, ஐக்கிய அரபு அமீரகம், யேமன் ஆகிய 13 நாடுகள் இணைந்து புயல்களுக்கான பெயர்ப் பட்டியலை உருவாக்குகின்றன.
- ஒவ்வொரு நாடும் பரிந்துரைத்த பெயர்கள் வரிசைப்படி பயன்படுத்தப்படுகின்றன.
- பண்டைக்காலத்தில் மன்னர்கள் தங்கள் செய்திகள், அறிவிப்புகள் மற்றும் போர்ப் பிரகடனங்களை மக்களுக்குப் பரவலாக அறிவிக்க பயன்படுத்திய பாரம்பரிய தோல் இசைக் கருவியே முரசாகும்.
- தகவல்களைப் பரப்பும் கருவியாக இருந்ததாலும், இயற்கை இடர்ப்பாடுகள் மற்றும் அவசர காலங்களில் மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கவும் முரசு பயன்படுத்தப்பட்டது.
- செங்கோல், கொடி போன்றவற்றுடன் மன்னரின் முக்கிய அடையாளங்களில் ஒன்றாக முரசும் விளங்கியது குறிப்பிடத்தக்கது.

ஜிஎஸ்டியில் விதிகள் மாற்றம்

- சிஜிஎஸ்டி சட்டம் 2017 இல் 69 ஆவது பிரிவை நீக்குவதற்குப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது.
- குற்றவியல் வழக்கு தொடர்வதற்கான குறைந்தபட்ச நிதி வரம்பு ரூ.1 கோடியிலிருந்து ரூ.5 கோடியாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

தரக்குறைபாடு மருந்துகளை கண்டறிவதில் தமிழகம் முதலிடம்

- அறிவிக்கப்பட்ட தரமற்ற மருந்துகளில் 45 சதவீதம் தமிழ்நாடு, உத்தர பிரதேசம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் கண்டறியப்பட்டதாக மத்திய மருந்து தரக்கட்டுப்பாடு அழைப்பு தெரிவித்துள்ளது.
- நாடு முழுவதும் விற்பனை செய்யப்படும் மருந்துகள், மாத்திரைகளின் தரத்தை உறுதி செய்ய தொடர் ஆய்வுகளும், பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.
- ஒருபுறம் மத்திய அரசு சார்பில் மருந்தகங்கள், கிடங்குகள், விநியோகக் கூடங்களில் மருந்துகளின் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆய்வுக்கு அனுப்பப்படுகிறது.
- மற்றொருபுறம் மாநில மருந்துக் கட்டுப்பாட்டு அமைப்புகளும் அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.
- அவ்வாறு ஆய்வுகளில் கண்டறியப்படும் தரமற்ற மருந்துகளின் விவரங்கள் மத்திய அரசுக்கு மாதந்தோறும் அனுப்பப்படும்.
- பொதுமக்களின் தகவலுக்காக அவை இணை வழியே மத்திய அரசால் வெளியிடப்படுகிறது.

- இந்நிலையில் கடந்த ஆகஸ்ட் மாதம் முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளில் நாடு முழுவதும் 220 மருந்துகள் தரமற்றவையாக இருந்தது கண்டறியப்பட்டது.
- முன்னணி நிறுவனங்கள் தயாரித்த ஆன்ட்டிபயாடிக் மருந்துகள், உயர் ரத்த அழுத்தத்துக்கான மருந்துகள் உள்ளிட்டவற்றின் தரத்தில் குறைபாடு இருந்ததாக அறிவிக்கப்பட்டது.
- இந்நிலையில், அவற்றில் 45 சதவீதம், அதாவது 100 மருந்துகள் தமிழகம், கர்நாடகம், உத்தர பிரதேசத்திலிருந்து கண்டறியப்பட்டவை எனத் தெரியவந்துள்ளது.
- தமிழகம் மற்றும் உத்தர பிரதேசத்தில் தலா 38 தரமற்ற மருந்துகளும், கர்நாடகத்தில் 24 தரமற்ற மருந்துகளும் ஆகஸ்ட் மாதத்தில் கண்டறியப்பட்டுள்ளன.

கடல்மட்ட உயர்வு என்னும் அச்சுறுத்தல்

- உலக அளவில் 77 கோடி பேர் கடலுக்கு மிக அருகில் வசிக்கிறார்கள். கடல்மட்ட உயர்வு தீவிரமடையும்போது இவர்கள்தான் முதலில் பாதிக்கப்படுவார்கள்.
- 1993 முதல் 2011 வரையிலான காலத்தில் ஆண்டுக்கு 2.65 மில்லிமீட்டர் உயர்வு என்று இருந்த அளவு 2012 முதல் 2025 வரையிலான காலகட்டத்தில் ஆண்டுக்கு 4.75 மில்லிமீட்டர் என்கிற அளவில் – கிட்டத்தட்ட இரண்டு மடங்காக உயர்ந்திருக்கிறது.
- கரிம உமிழ்வுகள் இப்போது இருக்கும் அளவிலேயே அதிகரித்தால் 2100 ஆம் ஆண்டுக்குள் உலகளாவிய கடல்மட்டம் 1.01 மீட்டர் உயரும் என்று கணிக்கப்பட்டிருக்கிறது.

» இந்தியாவுக்கு எச்சரிக்கை

- இந்தியாவைப் பொறுத்தவரை கடல்மட்ட உயர்வு என்பது பிற நாடுகளைவிட முக்கியமான பிரச்சினை. ஏனென்றால், மற்ற பெருங்கடல்களுடன் ஒப்பிடும்போது இந்தியப் பெருங்கடல் வேகமாக வெப்பமடைந்து கொண்டிருக்கிறது.
- குறிப்பாக, வங்காள விரிகுடா பகுதியில் உள்ள இந்தியக் கடற்கரைகளில் பாதிப்பு அதிகமாக இருப்பதை ஆராய்ச்சிகள் உறுதிசெய்திருக்கின்றன. அகமதாபாத், சென்னை, அமராவதி, கொச்சின், காக்கிநாடா, கொல்கத்தா போன்ற பகுதிகளில் பாதிப்பு ஏற்கெனவே தொடங்கிவிட்டது என 2026 இல் வெளியான ஓர் ஆய்வுக் கட்டுரை சொல்கிறது.
- சென்னையின் கடல்மட்டம் ஆண்டுக்கு 2.72 மில்லிமீட்டர் உயர்ந்து வருகிறது.
- 2026 இல் சென்னையில் கடல்மட்ட உயர்வு பற்றிய ஒரு முக்கியமான ஆய்வுக் கட்டுரை 'நேச்சர்' இதழில் வெளியானது.
- அதில் கடல்மட்ட உயர்வு மட்டுமல்லாது, தரையமிழ்வு பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. நிலம் தாழ்ந்துகொண்டே போகும் பகுதிகளில் கடல்மட்ட உயர்வு அதிகமாக உணரப்படும் என்று ஆய்வுக் குழுவினர் தெரிவிக்கிறார்கள்.
- கடல்மட்ட உயர்வு, தரையமிழ்வு ஆகியவற்றால் சோழிங்கநல்லூர், சிட்லபாக்கம், அடையாறு, தண்டையார்பேட்டை ஆகிய பகுதிகளில் வெள்ளம் போன்ற பாதிப்புகள் அதிகரிக்கும் என்று அந்தக் கட்டுரை எச்சரிக்கிறது.

» பொதுப்பிரச்சனை

- கடல்மட்ட உயர்வு என்பது எங்கேயோ கண்காணாத தூரத்தில் இருக்கும் ஒரு பிரச்சினை அல்ல. அது பலருக்கு வாழ்க்கை நிகழ்வாக மாறியிருக்கிறது என்கிற அழுத்தமான வாக்கியங்களுடன் ஐ.நா. பிரகடனம் தொடங்குகிறது.
- கடல்மட்ட உயர்வு என்பது மனித இனத்துக்கான பொதுப் பிரச்சினை என்பதை இந்தப் பிரகடனம் அங்கீகரிக்கிறது.
- கடல்மட்ட உயர்வு பற்றிய தரவுகள் – அறிவியல், இதற்கான தகவமைப்பு, நிதி ஒதுக்கீடு – மீண்டெழும் தன்மை, வாழ்வாதார இழப்புகள் – மரபுசார் இழப்புகள், இதன் பின்னணியில் உள்ள சட்டப் பரிமாணங்கள் ஆகிய நான்கு அம்சங்கள் இந்தப் பிரகடனத்தில் பேசப்பட்டிருக்கின்றன.
- கடற்கரைகளிலும் கடலோரப் பகுதிகளிலும் துறைமுகங்கள், ஆற்றல்சார் கட்டுமானங்கள் ஆகியவற்றை மேற்கொள்ளும்போது, கடல்மட்ட உயர்வால் எதிர்காலத்தில் அந்தப் பகுதியில் ஏற்படவிருக்கும் மாற்றங்களும் கணக்கில் கொள்ளப்பட வேண்டும் என்று இந்தப் பிரகடனம் வலியுறுத்துகிறது.
- சிறு தீவு நாடுகளின் உரிமைகள் பற்றிய சில அவசியமான, முக்கிய முடிவுகளை இந்தப் பிரகடனம் முன்வைக்கிறது.

TUTICORIN 99445 11344 | TIRUNELVELI 98942 41422 | RAMANATHAPURAM 75503 52916 | MADURAI 98431 10566 | CHENNAI 97555 52003 | COVAI 90433 10773 | TENKASI 98840 51717 | SALEM 95147 89102

- 1933 இல் எழுதப்பட்ட சர்வதேசச் சட்ட விதிகளின்படி, ஒரு இடம் தனி நாடாக அங்கீகரிக்கப்பட வேண்டுமானால் அதற்கு நான்கு அம்சங்கள் தேவை : நிரந்தரமாக அங்கேயே வாழும் மக்கள், சரியாக வரையறுக்கப்பட்ட எல்லைகள், வலுவான அரசாங்கம், பிற நாடுகளோடு உறவை ஏற்படுத்திக்கொள்ள முடிகிற தன்மை, காலநிலை மாற்றம் தீவிரமடைந்து, கடல்மட்ட உயர்வால் நிலங்கள் விழுங்கப்படும் இக்காலகட்டத்தில் இந்தச் சட்டம் எப்படிப் பொருந்தும் என்பது தீவு நாடுகளின் மிகப்பெரிய கவலையாக இருந்தது.
- நிலப்பகுதி முழுவதும் கடலில் மூழ்கிவிட்டாலோ பேரிடர் காரணமாக மக்கள் தற்காலிகமாக மட்டுமே தங்குவார்கள் என்கிற நிலை வந்தாலோ, ஒரு நாட்டுக்கான மேற்கண்ட தகுதிகள் இல்லாமல் போய்விடும்.
- அப்போது அது ஒரு தனி நாடு என்ற அங்கீகாரம் என்னவாகும் என்கிற கேள்வி இருந்தது. ஆனால், கடல்மட்ட உயர்வால் தீவு நாடுகள் எப்படிப்பட்ட பாதிப்புகளை அடைந்தாலும் தனிநாடு என்கிற அங்கீகாரம் தொடரும் என இந்தப் பிரகடனம் அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்திருக்கிறது.
- தீவுநாடுகள் கூட்டமைப்பின் தலைவரும் பலாவ் நாட்டின் அதிபருமான சுராங்கெல் விப்ஸ் ஜூனியர் இதை வரவேற்றிருக்கிறார்.
- கடல்மட்ட உயர்வு எங்கள் கடலோரப் பகுதிகளையும் வீடுகளையும் வாழ்க்கை முறைகளையும் அச்சுறுத்தலாம்.
- ஆனால், எங்களது சட்ட உரிமைகளையும் ஒரு நாடாக எங்களது இருப்பையும் அது ஒன்றும் செய்யாது என்று தெரிவித்திருக்கிறார்.

» முக்கியமான கேள்விகள்

- இது ஒரு பிரகடனம் மட்டுமே, சட்டரீதியான வலியுறுத்தல் அல்ல. கடல்மட்ட உயர்வைச் சமாளிக்க நாடுகளுக்கு நிதியுதவி தர வேண்டும் என்பது போன்ற வாக்கியங்கள் பரிந்துரைகளாக மட்டுமே இருக்கின்றன.
- எந்த ஒரு குறிப்பிட்ட நாட்டையும் பற்றிக் குறிப்பிடாமலேயே பொதுவான ஓர் ஆவணம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. நிதி உதவி என்பதும் போகிறபோக்கில் சொல்லப்படுகிறது.
- இது ஒரு பரிந்துரையாக மட்டுமே இருக்கிறது என்பதால், இதில் சொல்லப்பட்டிருக்கிற எதையும் செய்ய வேண்டிய கட்டாயம் நாடுகளுக்கு இல்லை.
- கடல் கனிம வளங்கள் பற்றிய முடிவுகள் சர்ச்சைக்கு உள்ளாகியிருக்கும் நிலையில், தீவு நாடுகள் மூழ்கும்போது அருகிலுள்ள கடற்படுகைகள் சார்ந்த உரிமை என்னவாகும் என்கிற கேள்வி எழுகிறது.
- தீவு நாடுகள் மூழ்கும்போது காலநிலை அகதிகளாக மாறும் மக்களின் சட்ட உரிமைகள் பற்றியும் தெளிவான வரையறைகள் தரப்படவில்லை.
- சம்பந்தப்பட்ட நாடுகளின் விருப்பத்தோடு அவர்கள் அங்கே குடிபெயரலாம். அவர்களுக்கு உதவச் சர்வதேச ஒத்துழைப்பு வேண்டும் என்கிற பரிந்துரை மட்டுமே இருக்கிறது.
- காலநிலை அகதிகளுக்கான உரிமைகள் பற்றி அழுத்தமாகப் பேசப்படவில்லை.

» மாற்றத்தை நோக்கி.....

- அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் செயல்பாடுகள், போர்ச்சூழல், பொருளாதாரச் சரிவு ஆகிய பிரச்சினைகளை ஐ.நா. இன்னும் கண்டிப்புடன் அணுகியிருக்க வேண்டும் என்று உலக அளவில் எதிர்ப்புக் குரல்கள் எழுந்துள்ளன.
- ஐ.நா.வலுவிழக்கத் தொடங்குகிறதா என்றும் வல்லுநர்கள் தீவிரமாக ஆராய்ந்து வருகிறார்கள். இந்தப் பின்னணியோடு சேர்த்துதான் சட்டரீதியான விதிமுறைகள் எதுவும் இல்லாத இந்தப் பிரகடனத்தையும் கவனிக்க வேண்டியிருக்கிறது.
- இன்னொருபுறம் காலநிலைச் செயல்பாட்டாளர்களோ, கடல்மட்ட உயர்வைப் பற்றி உலக நாடுகள் அனைத்தும் ஒருமித்த கருத்தை எட்டியிருப்பதே பெரிய வெற்றி என்று சொல்கிறார்கள்.
- சில குழப்பங்களும் கேள்விகளும் இருந்தாலும் இரு ஒரு முக்கியமான முதல்படி என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.
- அடுத்தடுத்த உச்சிமாநாடுகளில் நடக்கவிருக்கும் உரையாடல்கள் இந்தப் பரிந்துரைகளைச் சட்டங்களாகவும் ஒப்பந்தங்களாகவும் மாற்ற வேண்டும் என்பது சூழலியலாளர்களின் விருப்பம்.
- தீவு நாடுகளின் பிரதிநிதிகள், தங்களுக்கான உரிமையை உரத்த குரலில் வலியுறுத்தி வருகிறார்கள். அவர்களது தொடர் செயல்பாடுகள் உலக அரங்கில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் என்று நம்புவோம்.